தினகரன்
ஜூன் 10, 2024 திங்கட்கிழமை

புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி

# மினி மாரத்தான் போட்டி

புதுச்சேரி, ஜூன் 10: புதுச்சேரியில் புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி நடந்த மினி மாரத்தான் போட்டியில் 261 பேர் கலந்துகொண்டனர். இதில் வெற்றிபெற்றவர்களுக்கு ஆட்சியர் குலோத்துங்கன் பரிசு வழங்கினார்.

புதுச்சேரி சுகாதாரத்துறை, தேசிய சுகாதார இயக்கம், தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டம் (அரசு மார்பு நோய் நிலையம்) மற்றும் ஜிப்மர் சார்பில் உலக புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி மினி மாரத்தான் போட்டி நேற்று நடந்தது. இப்போட்டியை மாநில புகையிலை கட்டுப்பாட்டு அதிகாரி வெங்கடேஷ், ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் பங்கஜ் குந்த்ரா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். ஜிப்மர் மைதானத்தில் துவங்கிய மினி மாரத்தான் போட்டி புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள காந்தி சிலையில் நிறைவடைந்தது.

இதில் 20 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் 77 பேர், 20 முதல் 40 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் 145 பேர், 40 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் 39 பேர் என 261 பேர் கலந்துகொண்டனர். நிறைவாக, மாரத்தான் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கினார். முன்னதாக புகையிலை பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை மாநில ஆலோசகர் டாக்டர் சூரிய குமார் வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை மருத்துவ சமூக பணியாளர்கள் சிவன்ஞானம், பிரபு, சிவசண்முகம் ஆகியோர் செய்திருந்தனர்.



புதுச்சேரியில் புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி நடந்த மினி மாரத்தான் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு ஆட்சியர் குலோத்துங்கன் பரிசு வழங்கினார்.